# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,436 — 1924 ம் ஸ்ரீ மார்கழிமீ 19 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கல்முனைக்குடியிருப்பில் ஓர் சந்தையைக் கட்டுவதாகிய பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 5,945. குறிச்சி—கல்முனைக்குடியிருப்பு: 4 ங் குறிச்சி.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 10 | ரோட்டுவளவு .. | 40 வயதுள்ள 7 தென்னைகளுள்ள வளவு | உதுமான்கண்டுப்போடி அகமது லெவ்வை | 0 | 0 | 28·3 |
| 11 | குளள்ளுவளவு .. | வெளிவளவு .. .. | அப்துல்றசக் லெவ்வை ஆலிம் . | 0 | 0 | 15·2 |
| 12 | ஷை .. | ஷை .. .. | ஷை .. | 0 | 0 | 3·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1925 ம் ஸ்ரீ தை மாசம் 23 ந் தேதியிலன்று பத்து மணிக்கு கல்முனைக் கிராமக்கோட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படிக்கும் மேற்படி காணிகளின்பேரால் தங்களிடமுள்ள உறுதிகளைக் கொணர்ந்து காட்டும்படிக்கும் இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மட்டுக்களப்புக் கச்சேரி,
1924 ம் ஸ்ரீ மார்கழிமீ 15 ந் உ.

ஆர். பீ. நேய்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அநுராசபுரம் சேக்கிறெட் ரோட்டுக்கு விடப்பட்ட நிலம் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

டீ. எஸ். பீ. பீ. இல. 14A (எக்ஸ்திருக் 1). குறிச்சி—அநுராசபுரப் பட்டணம்.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 47 | ரோட்டிற்கு விடப்பட்ட நிலம் .. | வெளிநிலம் .. | அட்டமஸ்தானம் .. | 0 | 0 | 26·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1925 ம் ஞூ மாசி மாசம் 28 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு அநுராசபுரக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அநுராசப்புரக் கச்சேரி,
1924 ம் ஞூ மார்கழிமீ 10 ந் உ.

எல். முணசிங்க,
அரசாட்சி ஏசண்டுக்காக.

---

## அரசாட்சி திரும்பச் சுதந்தரமாக்கிக்கொள்ளப்படுவதற்கான காணி விளம்பரம்.

[அறிவித்தல் இலக்கம் 8,712, கேகாலை.]

### 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண்நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணிகளிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால் அவர்கள், 1924 ம் ஞூ மார்கழிமீ 19 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கேகாலைக் கச்சேரியில் கேகாலை உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் அல்லது எழுத்துமூலத்தில் தெரிபட்டு சொல்லப்பட்ட காணி அல்லது எக்காணிக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி சொல்லப்பட்ட காணிகள் அல்லது எக்காணி அல்லது காணிகள் அல்லது உடந்தைகள் குறித்த உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணி அல்லது காணிகள் முடிக்குரியதென அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

ஜே. ஆர். வொல்ற்றேர்ஸ்,
உதவி அரசாட்சி ஏசென்று.

(a) காணியைப்பற்றிய விவரங்கள் கேகாலை உதவி அரசாட்சி ஏசென்டர் அவர்களிடமிருந்தும், படங்களைப் பற்றியவை அளவைத் தலைவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) சொல்லப்பட்ட காணிகளின் அல்லது எக்காணியினதும் வழிஉரித்து உடந்தை உரித்துக்குச்சரி.

சொல்லப்பட்ட காணிகளின் விவரம்.

சப்பிரகாம மாகாணம் கேகாலை டிஸ்திறிக் பறணகுரு கோறளைப்பகுதி மாவத்தப்பத்து மாகுருதேனியா என்னுங் கிராமத்திலுள்ள இதன் பின்னால் காணுந் துண்டுகள் :—

பிரதமபடம் 3,268 ம் இலக்கம்.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|
| 1 | மாகுருதேனியகேனே | 0 0 17 |
| 2 | கங்கிரியகேனே | 0 0 9·2 |
| 3 | கொண்டனியகேனே | 0 0 18·1 |
| | | 0 1 4·3 |

எல்லைகளாவன: வடக்கு-எ. றங்கசாமி செட்டிக்குரிய மாகுருதேனியகேனேயும், காலஞ்சென்ற மெஸ். உவையர் வெதரின் உரித்தாளருக்குரிய கங்கிரிகேனேயும்; கிழக்கு-காலஞ்சென்ற மெஸ் உவையர்வெதரின் உரித்தாளருக்குரிய கங்கிரிகேனேயும், ஜெ. கெ. ஜஸ்றினுவுக்குரிய கொங்தெனியகேனேயும்; தெற்கு-கேகாலை கம்பிரிகேனேத்தோட்ட றோட்டு; மேற்கு-எ. றெங்கசாமிச் செட்டிக்குரிய மாகுருதேனியகேனே.

---

## சுப்பிறீங்கோட்டு அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சங்கைபொருந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கொளும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் கொளும்பு டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1925 ம் ஆண்டு தை மாதம் 12 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

கொளும்பு பிஸ்கால் கந்தோர்,
1924 ம் ஞூ டிசெம்பர்மீ 13 ந் உ.

ஆர். ஓ. ட சேரம்,
மேன் மாகாண பிஸ்காலுக்காக.

8549

---

A. C. RICHARDS, ACTING GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.